13th August 1960]

Law Ministers' Conference

* 180-A *Q.*—SRI S. M. ANNAMALAI : *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) 1960, ஜூன் மாதம் நடந்த சட்ட மந்திரிகள் மகாநாட்டில் என்னென்ன விஷயங்கள் விவாதிக்கப்பட்டன ?

(ஆ) அதன் நகல் ஒன்று மேஜை மீது வைக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : *ஸார், மேஜைமீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், சட்டக் கமிஷனுடைய 14-வது ரிப்போர்ட் பொதுவாக விவாதிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டக் கமிஷன் ரிப்போர்ட்டில் சட்டப் புத்தகங்கள் அனைத்தும் இந்தியிலே மொழிபெயர்க்கவேண்டும் என்று சொல்லப்பட்டதா ? உயர் நீதி மன்றங்களில் இந்தி பேசவேண்டும் என்று சொல்லப் பட்டதா ? இதிலே மாநில சர்க்காரின் அபிப்பிராயம் என்ன சொல்லப்பட்டது ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *மகாநாட்டு நடவடிக் கைகள் இன்னும் வரவில்லை. அதனால் ஞாபகத்திலிருந்து சொல்ல வேண்டியிருக்கிறது. ஹைகோர்ட்டுகளில் எந்த மொழி உபயோகப் படுத்தப்படவேண்டுமென்பதைப் பற்றி அங்கே விவாதத்திற்கு வரவில்லை. ஒரு சிலர் ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள் மற்றும் சிலர் மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். உதாரணமாக அங்கு யூனியன் சட்ட மந்திரிகள் உயர் நீதி மன்றங் களில் இந்திதான் உபயோகப்படுத்தப்படவேண்டுமென்று சொன்னார்கள். நான் சொன்னேன், "உபயோகப்படுத்தவேண்டு மென்ற விதி கிடையாது, அந்தந்த ஸ்டேட்டில் இருக்கின்ற மொழியினை உபயோகப்படுத்தலாம்" ; "இதில் அந்தந்த ராஜ்ய சட்ட சபைக்குத்தான் அதிகாரம் இருக்கிறது" என்று எடுத்துக் காட்டினேன். அதற்குப் பிறகு அவர் "எனது கருத்து ஒரே மொழியாக இருந்தால் நல்லது" என்று சொன்னார். "நீங்கள் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் கொள்ளலாம், இதிலே முடிவு எடுக்கவேண்டியது, ராஜ்ய சட்ட சபையும், ராஜ்ய சர்க்காரும்தான்" என்று நான் வலியுறுத்தினேன்.*

SRI M. KALYANASUNDARAM : Sir, one of the items discussed in the Conference is stated to be the setting up of Benches of High Courts at different centres. May I know whether in the light of those discussions, our Government have any proposal to set up a Bench of the High Court in one of the central districts of the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை.

SRI S. LAZAR : On the suggestion to have an All-India Judicial Service may I know what was the opinion or suggestion offered by the Government at that Conference?

THE HON. SRI C. SUBRAMANIAM : Our view was that it may not be feasible.

---

[a] Printed as Appendix I on page 188 infra.

SRI A. GOVINDASAMY : இந்த மாநாட்டில் நமது நிதி அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து பதிவு செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் பேசியதைப் பூராவும் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார்கள். பதிவு செய்யப் பட்டிருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : ஸார், பஞ்சாயத்துக் கோர்ட்டு களைப் பற்றிப் பேசப்பட்டதாகத் தெரிகிறது. அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆன பிறகு இப்போதிருக்கும் புதிய சட்டப்படி பஞ்சாயத்துக் கோர்ட்டுகளைப் பஞ்சாயத்து யூனியன் நடத்தக்கூடாது என்றிருக்கிறது. இது பற்றி என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஸ்ரீநகரில் நடந்த மாநாட்டைப் பற்றியது. அங்கத்தினர் திடீரென்று எங்கோ போய் விட்டார். தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI A. A. RASHEED : May I know whether the judicial strength has been increased as per item No. 8 in the paper placed on the table of the House and whether there is adequate judicial strength at present?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, as a matter of fact the permanent strength of the High Court has been increased from 10 to 12 Judges.

SRI K. VINAYAKAM : May I know the opinion of the Hon. Minister regarding the language to be used in Courts in our State? If he decides that English should be replaced in Courts also, will he give an opportunity to the High Court and other Courts to express their views on the subject, before he ventures upon that adventure?

THE HON. SRI C. SUBRAMANIAM : My view is that when English is to be replaced, it should be Tamil. As regards the question when English would be replaced, that time has not arisen.

SRI M. KALYANASUNDARAM : இந்த அறிக்கையின் 8-வது பிரிவில் "adequacy of Judicial strength and power of High Courts to create additional Courts without reference to State Government" ராஜ்ய சர்க்காரைக் கேட்காமலே அதிகப்படியான நீதிபதிகளை நியமிக்கலாம் என்றிருக்கிறதே, அதைப்பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டது ? நமது பட்ஜெட்டில் பணம் ஒதுக்காமலே ஹைகோர்ட் அதிகச் செலவு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஜில்லா அளவிலே, சப் கோர்ட் அளவிலே, முன்சிப் கோர்ட் அளவிலே அதிகமாக வேலை ஏற்படும்போது அதற்காகத் தற்காலிகமாகக் கோர்ட்டுகளை ஏற்படுத்தத்தான் அதிகாரம். கடைசியில் என்ன முடிவு எடுக்கப் பட்டது என்று தெரியவில்லை. நம்முடைய ராஜ்யத்தைப்

13th August 1960]

பொறுத்தவரையில் இப்போது ஹைகோர்ட்டிலிருந்து சிபாரிசு செய்கிறார்கள். எந்தெந்த இடத்தில் வேலை அதிகமாக இருக்கிறது, எங்கெங்கு அடிஷனல் சப் ஜட்ஜ், அடிஷனல் முன்சிப் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் அவர்களுடைய சிபாரிசை ஏற்று வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுகிறோம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : "ட்ரயல் பை ஜுரி" பற்றி என்ன கருத்து ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பற்றி என்ன முடிவு சொன்னார்களோ அதை நாமும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

SRI S. LAZAR : I understand that the recruitment of District Judges direct from the bar is already being done on a small scale in our State. May I know whether that subject was taken up in the Conference and if so, what was the proposal put forward by Government in this behalf?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry, Sir, I cannot say everything from recollection. I have already stated that the proceedings of the Conference have not yet been received by this Government.

SRI K. VINAYAKAM : Regarding the last item ' legal education ' is the Hon. Minister aware of the fact that in North Indian Universities candidates are allowed to qualify themselves for the law degree, LL.B. (LL.B. of Nagpur University for instance) and afterwards the successful candidates get themselves enrolled as legal practitioners and since they have proved themselves very successful lawyers, will this Government take steps to see that in our University also private candidates are allowed to study law and appear for the B.L. examination privately just like students in Northern Universities where such privilege exists?

THE HON. SRI C. SUBRAMANIAM : This matter has to be decided by the University. As a matter of fact not only in respect of legal education, but even in respect of general education, very many universities offer facilities for private study and for appearing for examinations privately; but our University has taken the uniform view that that will lower the standard.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, பி. ஏ. வகுப்பில் தமிழ் பாட மொழியாக ஆகியிருப்பதுபோல், சட்டத் துறைக் கல்வியையும் தமிழிலேயே பயில வாய்ப்பு ஏற்படுத்த திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது ஒரு கல்லூரியில் பி. ஏ. பாடம் தமிழிலே நடைபெற்று வருகிறது. இதெல்லாம் காலாகாலத்தில் யோசிக்க வேண்டிய விஷயங்கள்.

[13th August 1960

SRI R. SRINIVASA IYER : So far as item 15 is concerned, is there any proposal to appoint a Director of Public Prosecutions for this State or for the districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI M. KALYANASUNDARAM : சட்டக் கல்வி பற்றி ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தரத்தை உயர்த்த என்னென்ன விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்கு ஞாபகத்தில் இல்லை. அந்த மகாநாட்டின் நடவடிக்கைகள் குறிப்பு வந்த பிறகு பார்த்துச் சொல்லுகிறேன்.

New bus services in Coimbatore district

* 180-B *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ம் வருடத்தில், கோவை ஜில்லாவில் எத்தனை மார்க்கங்களில் புது பஸ் சர்வீஸ் நடத்தப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : During 1960 (up to 1st July 1960) 8 short routes and 7 medium routes were opened in Coimbatore district. Proposals for the opening of 1 short route and 5 medium routes are under the consideration of the Regional Transport Authority, Coimbatore.

SRI P. G. MANICKAM : பொது ஜனங்களிடமிருந்து எத்தனை புதிய பஸ் ரூட்டுகள் திறக்கப்பட வேண்டுமென்று சர்க்காருக்கு மனுக்கள் வந்திருக்கின்றன ? அவைகளில் இன்னும் எத்தனை புதிய பஸ் ரூட்டுகள் சர்க்கார் அனுமதி கொடுத்தும் திறக்கப்படவில்லை.

THE HON. SRI V. RAMAIAH : புது பஸ் ரூட்டுகள், பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியது ஆகிய பொறுப்பு "ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிட்டி"-யிடம் இருக்கிறது. ஆகவே, சர்க்காரிடத்தில் எத்தனை மனுக்கள் வந்தன என்ற விவரம் இல்லை.

Strike by taxi drivers

* 180-C *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state what steps the Government propose to take to stop frequent strikes by the taxi drivers?

THE HON. SRI R. VENKATARAMAN : There are no proposals before Government in this regard.

SRI A. A. RASHEED : May I know whether more Government buses were put on the road during the taxi strike in the City?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.